நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 48/2022

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சின்னசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள். |
| கிராமம் | : | மணக்காடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 9–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இரண்டாவது எதிரி ஆஜரில் இல்லை மற்ற எதிரிகள் ஆஜர். குவிமுச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.44PM)

1. நான் தற்போது மணக்காட்டில் குடியிருந்து வருகிறேன். வீட்டில்தான் உள்ளேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் பொது தட வழி பிரச்சினை இருந்து வருகிறது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மாலை 4 மணி அளவில் நானும்

என்னுடைய மனைவியும் மாட்டை பிடித்து வர பொது வழியில் சென்ற போது வையாபுரி முனியன் , மாரியப்பன் ஆகியோர் என்னை அடித்து விட்டார்கள்.மினியன் தொன்னையால் இடது பக்க தோள்பட்டையில் அடித்தார். மாரியப்பன் தொன்னையால் முதுகில் அடித்துவிட்டார்.

2. சண்டையை தடுக்க வந்த என் மனைவியை வையாபுரி, மினியன் மாரியப்பன் மூன்று பேரும் தொன்னையால் இடுப்பிலும் தோள்பட்டையிலும் அடித்து விட்டார்கள். அடிப்பட்டதில் நாங்கள் இருவரும் பேச்கு மூச்சின்றி மயக்கம் ஆகிவிட்டோம். அருகில் இருந்த உதவியோடு மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தோம். மருத்துவமனை வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் தொன்னைகளால் தான் எதிரிகள் என்னை அடித்தனர். (**146 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை ஒன்று அ.சா.பொ. 1 குறியீடு செய்யப்படுகிறது. 147 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை ஒன்று அ.சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 87 செ.மீ நீளம் கொண்ட விறகு கட்டை ஒன்று அ.சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் சொன்ன தொன்னைகள் என்பது விறகு கட்டைகள் தான். போலீசார் என்னை விசாரித்தனர். என்னை அடித்த நபர்களில் இரண்டு நபர்கள் இன்று ஆஜரில் உள்ளார்கள்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.01PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 48/2022**

**P.W. 2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | லட்சுமி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| கிராமம் | : | மணக்காடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 9–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**இரண்டாவது எதிரி ஆஜரில் இல்லை மற்ற எதிரிகள் ஆஜர். குவிமுச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.02PM)

1. நான் தற்போது மணக்காட்டில் குடியிருக்கிறேன். நான் மாடு வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் தட வழி பிரச்சினை இருந்து வருகிறது. 5 வருடங்களுக்கு முன்பு மாட்டை பிடித்து வர நானும் எனது

கணவரும் பொதுக் காட்டின் வழியாக சென்ற போது எனது கணவரை வையாபுரி கட்டையால் தலையில் அடித்தார். நான் சண்டையை தடுத்த போது எதிரிகள் கட்டையால் என்னையும் முதுகிலும் இடுப்பிலும் என்னை அடித்தார்கள் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ 1 முதல் 3 வரையிலான கட்டைகளால் தான் எங்களை அடித்தார்கள்.

2. என்னை அடித்ததில் இரண்டு நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் என்னை கட்டையால் இடுப்பில் அடித்தார்கள் நானும் எனது கணவரும் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். எனது கணவருக்கு மண்டையிலும் தோள்பட்டையிலும் அடிப்பட்டு இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.13PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 48/2022

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சின்னதம்பி |
| தந்தை / கணவர் பெயர் | : | பெரம்பன் |
| கிராமம் | : | காட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 51 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 9–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இரண்டாவது எதிரி ஆஜரில் இல்லை மற்ற எதிரிகள் ஆஜர். குவிமுச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.17PM)1.

1. நான் தற்போது காட்டுரில் குடியிருக்கிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஆகியோர் என்னுடைய உறவினர்கள் ஆஜர் எதிரிகள் என்னுடைய உறவினர். அ.சா.1 குடும்பத்திற்கும், ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும் தட

பிரச்சினை இருந்து வருகிறது.சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மாலை நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகளும் அ.சா.1ம் சண்டை போட்டு கொள்வதாக சொன்னார்கள்.

2. நான் கேள்விப்பட்டு சென்று சம்பவ இடத்திற்கு சென்ற பார்த்த போது வையாபுரி மினியன் மாரியப்பன் ஆகியோர் அ.சா.பொ. 1 முதல் 3 வரையிலான கட்டைகளால் அ.சா.1 மற்றும் அ.சா 2யை அ.சா.1 தலையிலும், அ.சா.2 ன் இடுப்பிலும் அடித்து காயப்படுத்தினார்கள். அதன் பிறகு காயம் பட்ட அ.சா.1 மற்றும் 2யை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-04.25PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**